சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள் 11.08.2025

வா.சா.1 - முத்து S/o வீரணன்

O.S No.247/2023 :

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

வழக்கு தொடர்பான விபரங்கள் எனக்கு தெரியும் நான் தான் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை கூறினேன். வழக்கு சொத்து சர்வே நம்பர் எனக்கு தெரியாது. நான் படிக்கவில்லை. பட்டா நம்பர் எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்கான பட்டா யார் பெயரில் இருந்தது என்பதை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து கூட்டு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். வழக்கு சொத்து கூட்டுப்பட்டாவில் இருந்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். வீரணன் என்பவர் என்னுடைய தகப்பனார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணமான கூட்டுப்பட்டாவில் முத்துவீரன் மகன் வீரணன் என்பவர் என்னுடைய தகப்பனார் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1ஆவணத்தில் வீரணன் மகன் கருப்பாயி என்று குறிப்பிடப்பட்டுள்ளதுஎன்றால் அது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது வீரணன் மகள் கருப்பாயி. மேற்படி வீரணன் என்னுடைய தந்தை கிடையாது. அவர் பங்காளியாவார். பாகத்தை பிரித்து கொண்டு பாகபிரிவினை தொடர்பான ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாய்மொழியாக பாகம் ஏற்பட்டது. 23-24 வருடங்களுக்கு முன்பாகவே பங்காளிவீட்டோடு வாய்மொழியாகவே பாகம் பிரிக்கப்பட்டது. கூட்டுப்பட்டாவில் உள்ள என்னுடைய பங்காளிகளை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. பட்டா கூட்டுப்பட்டாவாக இருப்பதால் அவர்களை இந்த வழக்கில் தேவையான தரப்பினர்களாக

சேர்க்கவேண்டும் என்றும், அவர்கள் இல்லாமல் தன்னிச்சையாக யார் யார்க்கு எவ்வளவு இடம் என்பதை நான் உத்தேசித்து சொல்ல இயலாது என்றால் சரியல்ல. 4வது பிரதிவாதி கிருஷ்ணன் என்ற ராமகிருஷ்ணன் என் உடன்பிறந்த தம்பி ஆவார். என் அப்பா வீரணனுக்கு 5 மகன்கள் ஒரு பெண்குழந்தை. பாண்டி, நான், மச்சக்காளை, 4ம் பிரதிவாதி கிருஷ்ணன், இருளாண்டி மற்றும் மகள் பெயர் நினைவில்லை. மொத்தம் பாகம் பிரிக்கப்பட்டது எங்களுக்குள் தலா ½ செண்டு வீதம் 3 செண்டை என் அண்ணன் தம்பிகளுடன் பிரித்து கொண்டோம். என் தந்தை வீரணனுக்கு 3 செண்டு தான் பாகம் என்று குறிப்பிடுவதற்கு ஆதாரம் இருக்கிறதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்திருக்கும் பாகபிரிவினை பத்திரத்தை பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.படிப்பறிவு இல்லை என்பதால் அதை பதிந்து கொள்ளவில்லை. யார் யாருக்கு எவ்வளவு இடம் என்பதில் பிரச்சினை இருந்ததால் தான் நாங்கள் பாகத்தை பதிவு செய்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. கூட்டுப்பட்டாவாக இருப்பதால் தான் பட்டா வழங்கப்படவில்லை என்றும் பாகபிரிவினை பத்திரமானது பதிவு செய்யப்படவில்லை என்பதால் தான் அதை வைத்து பட்டாவழங்கப்படக்கூடாது என்பதால் தான் பட்டா வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. வீடு வரி ரசீது எல்லாம் தாக்கல்செய்துள்ளேனா என்றால் இல்லை வீடு இடிந்துவிட்டது அதனால் தாக்கல் செய்யவில்லை. வீடு தரைமட்டமானதால் ஆவணங்களே இல்லை. நான் வழககு சொத்து உள்ள வீட்டில் குடியிருக்கவில்லை என்றும் அதனால் தான் ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதியிடம் இருந்து அவருடைய பாகத்தை நான் கிரையம் பெற்றதாக சொல்லும் ஆவணத்தையாவது நான் பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை. என் உடன்பிறந்த மற்ற சகோதர சகோதரிகளை தரப்பினர்களாக இந்த வழக்கில் சேர்க்கவில்லைஎன்றால் சரிதான். என் உடன்பிறந்த மற்ற சகோதர சகோதரிகளை சேர்க்காமல்

பாகபிரிவினையை நிருபிக்க இயலாது என்றும் அதனால் இந்த வழக்குதள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. ஆகவே இந்த வழக்கு தேவையான தரப்பினர்களை சேர்க்காமல் தாக்கல் செய்துள்ளதால் தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

(4ம் பிரதிவாதி தரப்பில் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை என்பதால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. )

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.08.11 18:38:00 +0530

Sub Judge

Melur